

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் முன்னிலையில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று முன்தினம் (27.11.2024) மாலை, மாநிலங்களவை முன்னாள் உறுப்பினரும் – மூத்த வழக்கறிஞருமான என்.ஜோதி தி.மு.க.வில் இணைந்தார்.அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், துணைப் பொதுச்செயலாளர் க.பொன்முடி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.11.2024) தனது பிறந்தநாளையொட்டி, சென்னை ராயப்பேட்டை டி.டி.கே சாலையில் செயல்பட்டு வரும் பெருநகர சென்னை மாநகராட்சி நகர்ப்புற வீடற்றோர் காப்பகத்தில் தங்கியுள்ள பெண் முதியோர்களுடன் சேர்ந்து கேக் வெட்டி தனது பிறந்த நாளை கொண்டாடி, முதியோர்களுக்கு உடை, உலர் பழங்கள் உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் சிவ. ராஜசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



புதுடெல்லியில் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பில் மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் வயநாடு தொகுதியில் மாபெரும் வெற்றி பெற்ற பிரியங்கா காந்தி அவர்களை சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

## பிரதமரின் 'விஸ்வகர்மா' திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தாது!

# சமூகநீதி அடிப்படையில் அதிகாரம் அளிக்கும் வகையில் விரிவான திட்டத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அமைச்சருக்குக் கடிதம்!

**சென்னை, நவ.29-**

**"பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தாது; சமூகநீதி அடிப்படையில், தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் தமிழ்நாட்டிற்கு என விரிவான திட்டம் ஒன்றினை உருவாக்கிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது" முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் ஜிதன் ராம் மஞ்சி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**

ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும், பிரதமரின் விஸ்வகர்மா திட்டம், சாதி அடிப்படையிலான தொழில் முறையை வலுப்படுத்தும் என்பதால், தற்போதைய வடிவில் அதனை செயல்படுத்திட இயலாது என்றும், சமூக நீதி அடிப்படையில், தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் விரிவான திட்டம் ஒன்றினை உருவாக்கிட தமிழ்நாடு அரசு முடிவு செய்திருப்பதாகவும் தெரிவித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் ஜிதன் ராம் மஞ்சி அவர்களுக்கு நேற்று முன்தினம் (27.11.2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரி விஸ்வகர்மா யோஜனா திட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு அரசின் சார்பில் 4.1.2024 நாளன்று இந்தியப் பிரதமர் அவர்களுக்கு தான் எழுதியிருந்த கடிதத்தினை முதலமைச்சர் அவர்கள் நினைவு கூர்ந்துள்ளார்.

ஒன்றிய அரசின் விஸ்வகர்மா திட்டம், சாதி அடிப்படையிலான தொழில் முறையை வலுப்படுத்தும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்தத் திட்டத்தை ஆய்வு செய்திட தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்டதாகவும், இக்குழு விரிவான ஆய்வினை மேற்கொண்டு, இத்திட்டத்தில் கீழ்க்காணும் மாற்றங்களைச் செய்திடப் பரிந்துரைத்துள்ளதாகவும், அவற்றை இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள்

விண்ணப்பதாரரின் குடும்பம், பாரம்பரியமாக குடும்ப அடிப்படையிலான வர்த்தகத்தில் ஈடுபட வேண்டிய கட்டாயத் தேவை நீக்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக, வழிகாட்டுதல்களில் பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு தொழிலையும் மேற்கொள்ள விரும்பும் எந்தவொரு நபரும் இந்தத் திட்டத்தின்கீழ் உதவி பெற தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

இத்திட்டத்தில் பயன்பெறுவோரின் குறைந்தபட்ச வயது வரம்பினை 35ஆக உயர்த்தலாம். இதனால் தங்கள் குடும்ப வர்த்தகத்தைத் தொடர, அதனை நன்கறிந்தவர்கள் மட்டுமே இந்தத் திட்டத்தின்கீழ் பலன்களைப் பெற முடியும்.

கிராமப்புறங்களில் பயனாளிகளை சரிபார்க்கும் பொறுப்பு கிராம பஞ்சாயத்து தலைவருக்கு பதிலாக, வருவாய்த் துறையைச் சேர்ந்த கிராம நிர்வாக அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இந்நிலையில், ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்திலிருந்து 15.3.2024 அன்று வரப்பெற்ற பதிலில், மேற்படி பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தை தற்போதைய வடிவில் செயல்படுத்துவதை தமிழ்நாடு அரசு முன்னெடுத்துச் செல்லாது என்றும், இருப்பினும், சமூக நீதி என்ற ஒட்டுமொத்த கொள்கையின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், சாதி அடிப்படையில் பாகுபாடு காட்டாத கைவினைஞர்களை உள்ளடக்கி, விரிவான திட்டம் ஒன்றினை உருவாக்கிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு செயல்படுத்தவிருக்கும் இந்தத் திட்டம், சாதி மற்றும் குடும்பத் தொழில் வேறுபாடின்றி, மாநிலத்தில் உள்ள அனைத்து கைவினைஞர்களுக்கும் முழுமையான ஆதரவை அளிக்கும் என்றும், இத்தகைய திட்டம் அவர்களுக்கு நிதி உதவி, பயிற்சி மற்றும் அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் விரிவாக உள்ளடக்கியதாக இருக்கும் என்றும் பெருமைபடத் தெரிவித்துள்ளார்.

## பிறந்தநாள்: என் அன்பு வேண்டுகோளை ஏற்று தமிழ்நாடெங்கும்

# மக்கள் நலத் திட்டங்களை வாரி வழங்கிய அனைவருக்கும் கோடானு கோடி நன்றி!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை,நவ.29-**

**"என் அன்பு வேண்டுகோளை ஏற்று தமிழ்நாடெங்கும் மக்கள் நலத்திட்டங்களை வாரி வழங்கிய அனைவருக்கும் கோடானு கோடி நன்றி" என்று கழக இளைஞர் அணிச் செயலாளரும்–துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இது குறித்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.11.2024) விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

எனது பிறந்தநாளை முன்னிட்டு, இன்று காலையில் இருந்து மட்டுமல்ல, கடந்த சில நாட்களாகவே கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்களின் வாழ்த்து மழையில் நனைந்து கொண்டிருக்கிறேன்.

நீங்கள் என் மீது காட்டும் அன்பு, தனிப்பட்ட உதயநிதிக்கானது என்பதை விட, நூற்றாண்டு கடந்த திராவிட இயக்கத்தின் மீதும், பவள விழா கண்டிருக்கும் நம்முடைய உயிருக்கும் மேலான திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும், நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடு என்பதாகவே நான் புரிந்து கொள்கிறேன்.

தமிழினத்தையும் நம் பண்பாட்டு அடையாளங்களையும் அழித்தொழிக்க, எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காத்திருக்கும் பாசிசப் பருந்துகளிடம் இருந்து, ஒரு தாய்க் கோழியாக நம்மைக் காத்து நிற்கும் நம்முடைய கழகத் தலைவர் –முதலமைச்சர் அவர்களின், படை வரிசையில் முன்னணியில் நிற்கும் ஒரு படை வீரன் என்பதில், எந்நாளும் பெருமை கொள்கிறேன்.

புதிய ஆண்டைத் தொடங்குகிறேன்!

காலையில் நம்முடைய கழகத் தலைவர் – திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்களிடமும், எனது அன்புத் தாயாரிடமும் பிறந்தநாள் வாழ்த்துகளைப் பெற்று, புத்துணர்ச்சியோடும் பெரும் ஊக்கத்தோடும் எனது புதிய ஆண்டைத் தொடங்குகிறேன்.

சென்னை கடற்கரையில், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களில் மரியாதை செலுத்திய பின்னர், வேப்பேரி, பெரியார் திடலில் அமைந்திருக்கும் `பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியாரின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினேன். அங்கே, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா அவர்களின் வாழ்த்துகளைப் பெற்றேன்.

**தொட்டில் பிரதேசம்!**

பிறகு, இனமான பேராசிரியர் தாத்தா அவர்களின் இல்லத்திற்குச் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினேன். எங்கள் தொட்டில் பிரதேசமாம் கோபாலபுரம் இல்லத்தில், கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்த பிறகு, சி.ஐ.டி. காலனியில் உள்ள கலைஞர் அவர்களின் இல்லத்திற்குச் சென்று, கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினேன்.

இதற்கிடையில், சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில், கழக மூத்த முன்னோடிகள் – மாணவர்கள் – மகளிர் – மாற்றுத்திறனாளிகள் – திருநங்கையர்கள் சுமார் 1,400 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினோம்.

சென்னையில் மட்டுமல்ல, தமிழ்நாடெங்கும் இப்படிப் பல்வேறு பகுதிகளிலும் கழகத்தின் சார்பிலும் – இளைஞர் அணியின் சார்பிலும் ஏராளமான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது அறிந்து நெகிழ்ச்சியுறேன்.

என் பிறந்த நாளை, மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டாடிட வேண்டும் என்ற என் அன்பு வேண்டுகோளை ஏற்று, தமிழ்நாடெங்கும் மாவட்டக் கழகம் – இளைஞர் அணி உள்ளிட்டவை சார்பில், மக்கள் நலத்திட்டங்களை வாரி வழங்கி என் பிறந்த நாளைக் கொண்டாடிய நீங்கள் அத்தனை பேரும் போற்றுதலுக்குரியவர்கள்.

இந்த நேரத்தில், அமைச்சர் பெருமக்கள் – சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்கள் – தலைமைக் கழக நிர்வாகிகள் – உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் – மாவட்டக்கழகச் செயலாளர்கள் – ஒன்றிய – நகர – பேரூர் – பகுதிக் கழக நிர்வாகிகள் – இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் – மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் தம்பிமார்கள் – பிற சார்பு அணிகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் – சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி மக்கள் – தோழமை இயக்கத் தலைவர்கள் – சமூக வலைத்தள தன்னார்வலர்கள்– சமூகச் செயற்பாட்டாளர்கள் – விளையாட்டு வீரர், வீராங்கனைகள்– அரசு அதிகாரிகள் – காவல்துறை உயர் அதிகாரிகள் – திரையுலக முன்னணியினர் அனைவருக்கும்,

கோடானு கோடி நன்றி!

அதே போல, விடியற்காலை முதல் `குறிஞ்சி' முகாம் அலுவலகத்தின் வாயிலில், சாரை சாரையாகக் குவிந்து வாழ்த்து மழை பொழிந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள் – குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் சிறப்பான முறையில் பிறந்த நாள் விழாவை, ஒருங்கிணைத்த சென்னை தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு அவர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் – அத்தனை பேருக்கும் என்னுடைய கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பிறந்த நாளுக்கு நீங்கள் அளிக்கும் பரிசுகளிலேயே மிகப் பெரியது என்று நான் கருதுவது, எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் 200-க்கும் அதிகமான இடங்களில் வெல்ல வேண்டும் என்ற நம் தலைவர் அவர்களின் இலட்சியத்தை நிறைவேற்றி, அந்த மாபெரும் வெற்றியை நாம் அனைவரும் நம் கழகத் தலைவர் அவர்களின் கரங்களில் கொண்டு சேர்ப்பது தான்.

இரண்டாம் முறையாக நம் தலைவர் அவர்களை முதலமைச்சராக அரியணை யேற்றிடவும், ஏழாவது முறையாக கழகம் ஆட்சியை அமைத்திடவும், அடுத்து வரும் ஒவ்வொரு நாளும் உழைத்திட உறுதியேற்போம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.






முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, 2030ம் ஆண்டுக்குள் கரூர் மாவட்டத்தின் ஏற்றுமதியின் மொத்த விற்றுமுதல் 50,000 கோடியை தொடும் வகையில், 'கரூர்விஷன் 2030' என்ற இலக்கை நோக்கிய நகர்வுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கரூர் மாவட்ட சிஐஐ, யங்இன்டியன்ஸ், முன்னெடுப்பில், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 73 சங்கங்கள் இணைந்து, கரூரில் நடத்திய மாபெரும் மாரத்தான் மற்றும் வாக்கத்தான் போட்டிகளை துவக்கி வைத்தார். வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்கு பரிசுகள் வழங்கினார்.





ஈரோடு வடக்கு மாவட்டம் , பவானி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பெரியபுலியூரில் பஸ் ஸ்டாப் அருகில் கழக இளைஞரணி சார்பில் மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன்ஆகியோர் கலைஞர் நூலகத்தை திறந்து வைத்து கழக கொடியேற்றினர். நிகழ்வில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், பவானி சட்டமன்றத் தொகுதி தலைமைக் கழக பார்வையாளரும் கழக நெசவாளர் அணி செயலாளருமான எஸ்.எல்.டி.சச்சிதானந்தம் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் திருவேங்கடம், மாணவரணி மாவட்ட அமைப்பாளர் தா.கிகிருபாகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், துணை அமைப்பாளர்கள், மாணவ, மாணவிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.